# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## நான்காம் தவணைப் பரீட்சை - 2021
## 4th Term Examination – 2021
## Conducted by Field Work Centre, Thondaimanaru
FWC


| தரம் :- 13 (2021) | வணிகக் கல்வி I | 32 | T | I | இரண்டு மணித்தியாலம் |
|---|---|---|---|---|---|

**அறிவுறுத்தல்கள்:-**
- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது சுட்டெண்ணை எழுதுக.
- 01 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- 31 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

சுட்டெண் :.......................................

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் I இற்காக | |
| வினா இலக்கம் | புள்ளிகள் |
| 01 – 30 | |
| 31 - 50 | |
| மொத்தம் | |

**01.** சில கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A – தேவைகள், விருப்பங்களை நிறைவுசெய்யும் செயற்பாடுகள்

B - இலாப நோக்குடைய மற்றும் இலாப நோக்கற்ற பொருளாதார நடவடிக்கைகள்

C – பொருட்கள், சேவைகளின் உற்பத்தி, சந்தைப்படுத்தல் மற்றும் விநியோக நடவடிக்கைகள்

மேலே தரப்பட்ட கூற்றுக்களில் 'வணிகம்' எனும் எண்ணக்கருவுக்கான ஏற்றுக்கொள்ளக்கூடிய வரைவிலக்கணமொன்றுடன் தொடர்புபட்ட கூற்றுக்கள்,

*(1)* A மற்றும் B மாத்திரம் *(2)* A மாத்திரம் *(3)* A மற்றும் C மாத்திரம்
*(4)* A, B மற்றும் C *(5)* C மாத்திரம் (……)

**02.** பண்டமாற்று முறை தொடக்கம் இன்று வரை பணப் பயன்பாட்டில் ஏற்பட்ட பரம்பல் படிமுறைகளில் சில X நிரலிலும் அவற்றுக்கான உதாரணங்கள் Y நிரலிலும் தரப்படுகின்றன.

| நிரல் - X | நிரல் - Y |
|---|---|
| A – பொருட் பயன்பாடு | *1* – ரூபா, டொலர், யூரோ |
| B – உலோகப் பயன்பாடு | *2* – தங்கம், வெள்ளி |
| C – நாணயம், நாணயத் தாள்களின் பயன்பாடு | *3* – புகையிலை, சிப்பி, யானைத் தந்தம் |
| D – வங்கிப் பணப் பயன்பாடு | *4* – காசோலை |

*(1)* A-3, B-2, C-1, D-4 *(2)* A-2, B-1, C-2, D-4 *(3)* A-3, B-1, C-4, D-2
*(4)* A-3, B-2, C-4, D-1 *(5)* A-3, B-4, C-2, D-1 (……)

**03.** பின்வருவன வணிக நடவடிக்கைகளில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய காரணிகள் சிலவாகும்.

A - இலங்கைத் தரச் சட்டம்

B – சர்வதேச ரீதியிலான சட்டதிட்டங்கள் உருவாதல்

C – புதிய தொழிநுட்பக் கண்டுபிடிப்புக்கள்

D – வியாபார ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்படல்

E - பழக்கவழக்கங்கள்




kalvi.lk

F – உலக அமைப்புக்கள் தோன்றுதல்

G – வியாபாரக் கூட்டுக்கள் உருவாதல்

மேற்குறித்த காரணிகளில் பூகோளச் சூழல் காரணிகளை மட்டும் கொண்ட விடைத் தொகுதியாக அமைவது,

(1) A, B, D, G (2) B, C, D, F (3) B, D, F, G

(4) A, B, C, D (5) C, D, E, F (……)

**04.** வெதுப்பகமொன்றின் உற்பத்தியுடன் தொடர்புபட்ட சில கீழே தரப்படுகின்றன.

A – உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருட்களைக் கொள்வனவு செய்தல்.

B – ஊழியர்களுக்குப் போதியளவு பயிற்சிகளை வழங்குதல்.

C - மூலப் பொருட்களை சரியான அளவுகளில் சேர்த்தல்.

D – உற்பத்திக் கிரயத்தை இழிவுபடுத்துவதற்கான மாற்று முறைகளை கண்டறிதல்.

E – உற்பத்திகளைத் தயாரித்துப் பொதியிடல்

F – உற்பத்திக் கிரயத்தை கணித்தல்.

மேலே தரப்பட்டுள்ள கூற்றுக்களில் உற்பத்திச் செயன்முறைகளாகக் கருதக்கூடியவற்றை உள்ளக்கிய விடையினைத் தெரிவுசெய்க.

(1) A, C, F (2) A, B, D (3) C, E, F

(4) A, E, F (5) A, C, E (……)

**05.** பின்வரும் அட்டணையில் X நிரலில் அக்கறையுடைய தரப்பினர்களும் Y நிரலில் வணிகத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய சமூகப் பொறுப்புக்களும் தரப்பட்டுள்ளன.

| நிரல் X | நிரல் Y |
|---|---|
| A – உரிமையாளர் | 1 – வேலைவாய்ப்பிற்குப் பங்களிப்புச் செய்தல் |
| B – ஊழியர் | 2 – நியாயமாக நடந்துகொள்ளல் |
| C – வாடிக்கையாளர் | 3 – நியாயமான உழைப்பைப் பெற்றுக்கொள்ளல் |
| D – சமூகம் | 4 – சமத்துவமான நிலை |

அக்கறையுடைய தரப்பினர்களையும் வணிகத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய சமூகப் பொறுப்புக்களையும் சரியாக இணைக்கும்போது பெறப்படும் விடையினைத் தெரிவுசெய்க.

(1) A-2, B-3, C-3, D-1 (2) A-2, B-4, C-3, D-1 (3) A-3, B-1, C-2, D-4

(4) A-3, B-4, C-2, D-1 (5) A-2, B-1, C-4, D-3 (……)

**06.** வணிகமொன்று பொருளாதார நிலைபேறான தன்மையின் சார்பாகக் கருமமாற்றும்பொழுது கவனம்செலுத்தவேண்டிய விடயங்களும், சூழலின் நிலைபேறான தன்மையின் சார்பாகக் கருமாற்றும்பொழுது கவனம்செலுத்த வேண்டிய விடயங்களும் கீழே தரப்பட்டுள்ளன.

A – பொருளாதார விருத்தியும் நிலைப்பாடும்

B – வளப் பயன்பாடு

C – உற்பத்தியும் நுகர்வும்

D - மூலப் பொருட்களும் கழிவுப் பொருள் முகாமைத்துவமும்

E – பூரண வேலைவாய்ப்பு

F - இடர் முகாமைத்துவம்

மேற்குறிப்பிட்டவற்றுள் வணிகமொன்று பொருளாதார நிலைபேறான தன்மையின் சார்பாகக் கருமமாற்றும்பொழுது கவனம்செலுத்தவேண்டிய விடயங்கள் எத்தனை காணப்படுகின்றன?

(1) 4 (2) 5 (3) 2 (4) 3 (5) 6 (……)



kalvi.lk

07. இலங்கையிலுள்ள வணிகங்கள் மீது அரசாங்கம் செல்வாக்குச் செலுத்தும் முறையானது கீழே தரப்பட்டுள்ளது.
அவற்றுள் அரசு செல்வாக்குச் செலுத்தும் விதம், அரச மட்டம் மற்றும் உதாரணம் என்பவற்றைச் சரியாகக் காட்டும் விடையினைத் தெரிவுசெய்க.

| செல்வாக்குச் செலுத்தும் விதம் | அரச மட்டம் | உதாரணம் |
|---|---|---|
| (1) போட்டியாளரொருவராக | மத்திய அரசு | தனியார்துறை தொலைக்காட்சி அலைவரிசையுடன் போட்டியிடக் கூடியவாறு அரசதுறை தொலைக் காட்சிச் சேவைகளை நடாத்துதல். |
| (2) வாடிக்கையாளரொருவராக | மாகாண சபை | இறந்தவர்களின் உடல்களைத் தகனம்செய்யும் நிலையங்களை நடாத்துதல். |
| (3) கொள்கைகளை உருவாக்குதல் | உள்ளூராட்சி நிறுவனங்கள் | வியாபாரக் கட்டளை சட்டங்களை நடைமுறைப்படுத்தல். |
| (4) சட்டதிட்டங்களை உருவாக்குதல். | மத்திய அரசு | கட்டடம் அமைப்புத் திட்டங் களுக்கு அனுமதியளித்தல். |
| (5) வரி அறவீட்டாளராகச் செயற்படல். | மாகாண சபை | உள்நாட்டு இறைவரித் திணைக் களத்தினூடாக வரி அறவிடல். |

(……)

08. நுகர்வோர் பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் தொடர்புடைய நிறுவனங்களை மாத்திரம் உள்ளக்கிய விடையினைத் தெரிவுசெய்க.
(1) உள்நாட்டு இறைவரித் திணைக்களம், பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை, இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், இலங்கைத் தரக் கட்டளைகள் பணியகம்
(2) மத்திய சூழல் அதிகார சபை, இலங்கைத் தரக்கட்டளைகள் பணியகம், அளவை நிறுவை தரநியமச் சேவைத் திணைக்களம், தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு
(3) இலங்கைத் தரக்கட்டளைகள் பணியகம், கைத்தொழில் அபிவிருத்திச் சபை, தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, கைத்தொழில் தொழிநுட்ப நிறுவனம்
(4) அளவை நிறுவை தரநியமச் சேவைத் திணைக்களம், இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை, கைத்தொழில் தொழிநுட்ப நிறுவனம்
(5) இலங்கைத் தரக்கட்டளைகள் பணியகம், இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, கைத்தொழில் அபிவிருத்திச் சபை (……)

09. வணிக அமைப்புக்கள் தொடர்பாக பாடசாலையொன்றின் சில மாணவர்கள் முன்வைத்த கருத்துக்கள் பின்வருமாறு.

சயந்தன் - அரச கூட்டுத்தாபனங்கள் பொது அல்லது விசேட சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட முடியும் என்பதோடு அவை சட்டரீதியான தனிமனித அந்தஸ்தைக் கொண்டுள்ளன.
நிருபா - வணிக அமைப்புக்கள் பதிவுசெய்வதன் மூலம் சட்டரீதியான தனிமனித அந்தஸ்தைப் பெற முடியும்.
சத்தியன் - பங்குடமைகள் எழுத்து மூலமான பங்குடமை உடன்படிக்கைகள் இன்றி தொழிற்பட முடியும்.
கோகுல் - அரச திணைக்களங்கள் சட்டரீதியான தனிமனித அந்தஸ்தைக் கொண்டுள்ளதோடு அவை வரையறையற்ற நட்டப்பொறுப்பையும் கொண்டுள்ளன.
வனஜா - கூட்டுறவு அமைப்புக்கள் முற்றுமுழுதான தனியார்துறை அமைப்பாகக் காணப்படுவதோடு கட்டாயம் பதிவுசெய்யப்பட வேண்டியனவாகும்.

மேற்குறித்த மாணவர்களில் சரியான கருத்தினைக் கொண்டுள்ள மாணவர்களை உள்ளடக்கும் விடையினைத் தெரிவுசெய்க.
(1) நிருபா, கோகுல் (2) சயந்தன், நிருபா, வனஜா (3) சத்தியன், வனஜா
(4) கோகுல், வனஜா (5) சயந்தன், சத்தியன், வனஜா (……)


kalvi.lk

**10.** கம்பனி அமைப்புக்கள் சிலவும் அவற்றுக்கான பண்புகள் சிலவும் முறையே நிரல் X இலும் நிரல் Y இலும் காட்டப்பட்டுள்ளன.

**நிரல் X – கம்பனி அமைப்புக்கள்**

A – வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி

B – பட்டியல்படுத்தப்பட்ட கம்பனி

C – பிணையால் வரையறுக்கப்பட்ட கம்பனிகள்

D – கரைகடந்த கம்பனி

E – வெளிநாட்டுக் கம்பனி

**நிரல் Y – பண்புகள்**

*1* – *2007* ஆம் ஆண்டு *7* ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட, இலங்கையில் வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத, தொழிற்படும் நாட்டின் கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட கம்பனிகள்

*2* - *2007* ஆம் ஆண்டு *7* ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட, பொதுமக்களுக்கு பங்குகளை பகிரங்கமாக வழங்கக்கூடிய, கொழும்பு பங்குப் பரிமாற்றகத்தில் பதிவுசெய்துள்ள, பெயரின் இறுதியில் "PLC" எனும் எழுத்துக்களைக் கொண்ட கம்பனிகள்

*3* – இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்டு மீண்டும் *2007* ஆம் ஆண்டு *7* ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட, இலங்கையில் பங்குகளை வழங்கி மூலதனத்தைத் திரட்டக்கூடிய கம்பனிகள்

*4* – *2007* ஆம் ஆண்டு *7* ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட, பொது மக்களுக்கு பகிரங்கமாகப் பங்குகளை வழங்க முடியாத, கடன்தீர்க்கும் ஆற்றல் தொடர்பான பரிசோதனை இன்றி பங்கிலாபங்களை பங்குதாரருக்குப் பகிர்ந்து வழங்கக்கூடிய கம்பனிகள்

*5* – *2007* ஆம் ஆண்டு *7* ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட, பங்குகளை வழங்காது அமைப்பு அகவிதிச் சட்டக்கோவையில் குறிப்பிடப்பட்டவாறு பொறுப்புக்களை வரையறுத்துள்ள கம்பனி

மேற்படி நிரல் X இலுள்ள கம்பனிகள் வகைகளுக்கேற்ப அவற்றின் பண்புகளை ஒழுங்கமைக்கும்போது பெறப்படும் சரியான விடையினைத் தெரிவுசெய்க.

*(1)* A-4, B-2, C-5, D-1, E-3 *(2)* A-4, B-2, C-1, D-5, E-3 *(3)* A-3, B-4, C-5, D-1, E-2

*(4)* A-4, B-5, C-2, D-1, E-3 *(5)* A-4, B-2, C-5, D-3, E-1 (……)

**11.** வணிக அமைப்புக்கள் சில கீழே தரப்படுகின்றன.

A – சிவா அன்ட் கோ

B – வரையறுக்கப்பட்ட லங்கா கிளியர் (தனிக்) கம்பனி

C – வரையறுக்கப்பட்ட அரலிய கம்பனி

D – கிளிநொச்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்

மேற்குறித்த வணிகங்களின் ஆகக் குறைந்த மற்றும் ஆகக் கூடிய உரிமையாளர்களைக் காட்டும் சரியான விடையினைத் தெரிவுசெய்க.

*(1)* A – *1* – *20*, B – *1* – *50*, C – *1* – வரையறையில்லை, D – *10* – வரையறையில்லை

*(2)* A – *2* – *20*, B – *2* – *50*, C – *1* – வரையறையில்லை, D – *10* – வரையறையில்லை

*(3)* A – *2* – *20*, B – *1* – *50*, C – *1* – வரையறையில்லை, D – *10* – வரையறையில்லை

*(4)* A – *2* – *20*, B – *1* – *50*, C – *1* – வரையறையில்லை, D – *1* – *10*

*(5)* A – *2* – *20*, B – *1* – *50*, C – *2* – *50*, D – *10* – வரையறையில்லை (……)



kalvi.lk

**12.** முயற்சியாண்மைத் திறன்கள் X நிரலிலும் அவற்றுக்கான கருத்துக்கள் Y நிரலிலும் காட்டப்பட்டுள்ளன.

| நிரல் X | நிரல் Y |
|---|---|
| 1. தலைமைத்துவத்திறன்<br>2. ஆளிடைத்தொடர்புத்திறன்<br>3. தொடர்பாடல் திறன்<br>4. அடிப்படை முகாமைத்துவத் திறன் | A – உள்ளக வெளியக பிரிவினர்களுடன் சிறந்த இடைத் தொடர்புகளைப் பேணுதல்.<br>B – தனக்குக் கீழ் பணிபுரிவோர்களைக்கொண்டு கருமங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு அவர்களை ஊக்கப்படுத்தி முறையாக நெறிப்படுத்துதல்.<br>C – நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக சிறந்த தொடர்புகளைப் பேணுதல்.<br>D – திட்டமிடல், ஒழுங்கமைத்தல், நெறிப்படுத்தல், கட்டுப்படுத்தல் போன்ற அடிப்படை முகாமைத்துவத் திறன்களைக் கொண்டிருத்தல். |

X நிரலில் தரப்பட்ட முயற்சியாண்மைத் திறன்களின் ஒழுங்கிற்கேற்ப Y நிரலில் தரப்பட்ட அவற்றுக்கான விளக்கங்களை ஒழுங்குபடுத்தினால் பெறப்படும் விடையினைத் தெரிவுசெய்க.

(1) D, C, A, B (2) B, D, A, C (3) B, A, D, C
(4) B, A, C, D (5) D, C, B, A (……)

**13.** சிறிய நடுத்தரளவு வணிகங்களை இனங்காண்பதற்கான நியதிகளை வழங்கிய அமைப்புக்கள் சில X நிரலிலும் அவை வழங்கியுள்ள நியதிகள் Y நிரலிலும் தரப்பட்டுள்ளன.

| நிரல் X – அமைப்புக்கள் | நிரல் Y – நியதிகள் |
|---|---|
| 1. கைத்தொழில் அபிவிருத்திச் சபை<br>2. கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு<br>3. குடிசனப் புள்ளி விபரத் திணைக்களம்<br>4. இலங்கை மத்திய வங்கி | A – முதலிடப்பட்ட மூலதனம் ரூபா 20 மில்லியன் இற்கு மேற்படாத வணிகம்<br>B – 50 கிலோவற்ஸ்க்கு குறைவாக மின்சக்தியைப் பயன்படுத்தும் வணிகம்<br>C – ஈடுபடுத்தியுள்ள மூலதனம் 10 மில்லியனுக்கு மேற்படாத வணிகம்<br>D – ஊழியர் எண்ணிக்கை 25 இற்கு குறைவாக இருக்கும் வணிகம் |

X நிரலில் தரப்பட்டுள்ள அமைப்புக்களின் ஒழுங்கிற்கேற்ப Y நிரலில் தரப்பட்டுள்ள நியதிகளை ஒழுங்குபடுத்தினால் பெறப்படும் விடை யாது?

(1) A, D, C, B (2) C, D, A, B (3) C, A, B, D
(4) C, A, D, B (5) B, D, A, C (……)

**14.** சிறிய மற்றும் நடுத்தரளவு வணிகங்கள் தொடர்பான கூற்றுக்கள் வருமாறு.

A – சந்தை சிறியதாக இருத்தல்.
B – குடும்பத்தின் உழைப்பு கூடுதலாகப் பயன்படுத்தப்படல்.
C – நவீன தொழிநுட்பப் பாவனை அதிகளவில் காணப்படல்.
D – பெரும்பாலும் உள்நாட்டுச் சந்தையில் பொருட்கள் வழங்கப்படல்.
E – உரிமையாளரின் சுதந்திரத்தன்மை குறைவாகக் காணப்படும்.
F – குறைந்த ஊழியர் எண்ணிக்கை

மேலே தரப்பட்டுள்ளவற்றுள் சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களின் பண்புகளில் சரியானவை எத்தனை காணப்படுகின்றன?

(1) 4 (2) 2 (3) 6 (4) 5 (5) 1 (……)



kalvi.lk

15. பிரியங்கா தன்னிடம் கையிருப்பில் சேமிப்பாக இருந்த ரூபா 100 000 இனை இலங்கை வங்கியில் சேமிப்புக் கணக்கொன்றில் வைப்புச்செய்ததுடன் அக்கணக்கிலுள்ள பணத்தொகையினைப் பயன்படுத்தி கொடுக்கல்வாங்கல்களை இலகுவாக மேற்கொள்வதற்காக வரவட்டை ஒன்றினையும் பெற்றார்.
இங்கு குறிப்பிடப்படும் பண வகைகளை ஒழுங்குமுறையாகக் காட்டும் விடையினைத் தெரிவுசெய்க.
(1) சட்டப் பணம், வங்கிப் பணம், இலத்திரனியல் பணம்
(2) சட்டப் பணம், அண்மிய பணம், இலத்திரனியல் பணம்
(3) சட்டப் பணம், வங்கிப் பணம், கடன் பணம்
(4) வங்கிப் பணம், இலத்திரனியல் பணம்
(5) அண்மிய பணம், இலத்திரனியல் பணம் (……)

16. இலங்கையிலுள்ள நிதி நிறுவனங்களின் வகைகள் நிரல் X இலும் அவற்றில் உள்ளடங்கக்கூடிய நிதி நிறுவனங்கள் நிரல் Y இலும் தரப்பட்டுள்ளன.

| நிரல் X | நிரல் Y |
|---|---|
| A – வங்கித் துறை | 1 – உத்தரவு பெற்ற நிதிக் கம்பனி |
| B – வைப்புக்களை ஏற்கும் ஏனைய நிதி நிறுவனங்கள் | 2 – முயற்சியாண்மை மூலதனக் கம்பனிகள் |
| C – விசேட நிதி நிறுவனங்கள் | 3 – காப்புறுதிக் கம்பனிகள் |
| D – ஒப்பந்த சேமிப்பு நிறுவனங்கள் | 4 – உத்தரவு பெற்ற விசேட வங்கிகள் |

மேலே தரப்பட்ட நிதி நிறுவனங்களின் வகைகளையும் அவற்றில் உள்ளடங்கக்கூடிய நிதி நிறுவனங்களையும் சரியாக இணைக்கும்போது பெறப்படும் விடையினைத் தெரிவுசெய்க.
(1) A-4, B-1, C-2, D-3 (2) A-1, B-4, C-2, D-3 (3) A-3, B-2, C-1, D-4
(4) A-4, B-1, C-3, D-2 (5) A-1, B-2, C-4, D-3 (……)

17. தரம் 13 வர்த்தகத்துறையில் ஒரே வகுப்பில் கல்விபயிலும் ஐந்து மாணவர்கள் காசோலை தொடர்பாக பின்வரும் கருத்துக்களைக் கூறுகின்றனர்.
சர்மிலன் - காசோலை ஒன்றின் முன்புறத்தில் இரு சமாந்தரக் கோடுகளை வரைந்து அல்லது அக்கோடுகள் இன்றி வங்கியொன்றின் பெயரை எழுதி அக்காசோலையினை புறக்குறிப்பிடலாம்.
சதுமிலன் - காவியின் காசோலை ஒன்றினை கைமாற்றும்போதோ அல்லது வங்கிக் கரும பீடத்தில் சமர்ப்பித்துப் பணம் பெறும்போதோ புறக்குறிப்பிடல் அவசியமற்றது.
சகிலன் - ‘பெறுவோன் கணக்கு மட்டும்’ எனக் குறுக்குக் கோடிடப்பட்ட காசோலை ஒன்றினை இன்னொருவருக்கு சாட்டுதல் செய்ய முடியாது.
நதுமிதா - குறுக்குக் கோடிடப்பட்ட காசோலை ஒன்றினை வங்கிக் கணக்கில் வைப்புச் செய்தே பணமாக்க முடியும்.
நவீனா - காசோலை ஒன்று தொடர்பாக கட்டளை பெறுபவர் எப்போதும் ஒரு வணிக வங்கி ஆகும்.
மேற்படி மாணவர்களில் சரியான கருத்தினைக் கூறிய மாணவர்களை உள்ளடக்கிய விடையினைத் தெரிவுசெய்க.
(1) சர்மிலன், சதுமிலன், சகிலன் (2) சர்மிலன், சதுமிலன், நதுமிதா
(3) சதுமிலன், சகிலன், நவீனா (4) சர்மிலன், நதுமிதா, நவீனா
(5) சகிலன், நதுமிதா, நவீனா (……)

18. பின்வரும் இடர்களைக் கவனிக்க.
A – கள்வர் வீட்டிற்குள் நுழைந்து தங்க ஆபரணங்களை எடுத்துச் செல்லல்.
B – மாணவரொருவர் க.பொ.த. (உயர்தரப்) பரீட்சையில் சித்தியடையத் தவறுதல்.
C – விநியோக வாகனமொன்று விபத்திற்குள்ளாகுதல்.
D – கடன்பட்டோரிடமிருந்து கடன் பணம் கிடைக்காமல் போதல்.
E – விநியோக வாகனம் பெறுமானத் தேய்வடைதல்.
மேற்படி இடர்களில் காப்புறுத்தக் கூடிய இடர்களைக் கொண்ட விடையினைத் தெரிவுசெய்க.


kalvi.lk

(1) A, C மட்டும் (2) A, C, F மட்டும் (3) A, D மட்டும்

(4) A, C, D மட்டும் (5) A, D, E மட்டும் (……)

**19.** வணிகமொன்று மேற்கொண்ட தொடர்பாடல் நடவடிக்கைகள் பின்வருமாறு.

A – கடந்த வார விற்பனை தொடர்பான சுருக்க அறிக்கையொன்றினைத் தயார்செய்யுமாறு பொது முகாமையாளரால் விற்பனை முகாமையாளருக்கு தொலைபேசி மூலமாக அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

B – அடுத்துவரும் மாதத்திற்கு விலைக் குறைப்பினை மேற்கொள்வது பற்றி வாடிக்கையாளர்களுக்கு பத்திரிகை விளம்பரம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

C – விற்பனைக்கான பொருள் இருப்பு தொடர்பான விபரங்களை வழங்குமாறு கொழும்பிலுள்ள தலைமையகத்தினால் கண்டியிலுள்ள கிளை நிறுவனத்திற்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

D – விரைவில் வணிகத்தினால் அறிமுகப்படுத்தப்படவுள்ள புதிய உற்பத்திப் பொருள் தொடர்பாக இணையத்தின் மூலம் விளம்பரப்படுத்தல் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி தொடர்பாடல் நடவடிக்கைகளைச் சரியாக வகைப்படுத்திக் கூறும் விடையினைத் தெரிவுசெய்க.

(1) A – இலத்திரனியல் தொடர்பாடல் B – உள்ளகத் தொடர்பாடல் C – புறத் தொடர்பாடல் D – வாய்மொழித் தொடர்பாடல்

(2) A – உள்ளகத் தொடர்பாடல் B – எழுத்துமூல தொடர்பாடல் C – புறத் தொடர்பாடல் D – இலத்திரனியல் அல்லாத தொடர்பாடல்

(3) A – இலத்திரனியல் தொடர்பாடல் B – புறத் தொடர்பாடல் C – உள்ளகத் தொடர்பாடல் D – புறத் தொடர்பாடல்

(4) A – இலத்திரனியல் அல்லாத தொடர்பாடல் B – புறத் தொடர்பாடல் C – அகத் தொடர்பாடல் D – வாய்மொழித் தொடர்பாடல்

(5) A – இலத்திரனியல் தொடர்பாடல் B – குறியீடு மூலமான தொடர்பாடல் C – புறத் தொடர்பாடல் D – வாய்மொழித் தொடர்பாடல் (……)

**20.** உற்பத்தியின் பின்னர் நுகர்வோர் வரை பாய்தல் நிலை கொண்ட அமையவில் முறை (போக்குவரத்தும் வழங்கல் சேவையும்) எவ்வாறு அழைக்கப்படும்?

(1) அதிகரித்த பெறுமதியில் உள்நோக்கிய அமையவியல் முறை (Heavy inbound logistic system)

(2) சமப்படுத்தப்பட்ட அமையவியல் முறை (Balanced logistic system)

(3) அதிகரித்த பெறுமதியில் வெளிச்செல்லும் அமையவியல் முறை (Heavy outbound ligsitic system)

(4) நேர்மாற்று அமையவியல் முறை (Reverse logistic system)

(5) உள்நோக்கிய அமையவியல் முறை (Inbound logistic system) (……)

**21.** களஞ்சியசாலை ஒன்றினை அமைக்கும்போது கருத்தில்கொள்ளப்பட வேண்டிய விடயங்களுள் தவறான விடையினைத் தெரிவுசெய்க.

(1) கட்டடத்தின் அமைப்புத் திட்டமும் வசதிகளும்

(2) பிரதான தொடர்புகளுக்கு அண்மித்ததாக இருத்தல்

(3) வாடிக்கையாளர் கேள்வியின் தன்மை

(4) களஞ்சியப்படுத்தப்படும் பொருளின் தன்மை

(5) கிரயம் (……)

**22.** பின்வரும் விடைகளுள் ஒன்று தெற்காசிய வலய நாடுகளின் ஒத்துழைப்பிற்கான சங்கம் (SAARC) அமைப்பில் அங்கத்துவம் பெறும் சில நாடுகளை மாத்திரம் கொண்டுள்ளது. அவ்விடையினைத் தெரிவுசெய்க.

(1) இலங்கை, இந்தியா, மலேசியா, மாலைதீவு

(2) இலங்கை, இந்தியா, பூட்டான், சிங்கப்பூர்

(3) இலங்கை, பூட்டான், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான்

(4) இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், சீனா

(5) இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், சீனா (……)



kalvi.lk

**23.** பின்வரும் வணிக நடவடிக்கைகளைக் கருத்தில் கொள்க.

A – மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் விற்பனை செய்வதற்காக சிற்றுண்டிகள் சிலவற்றை பாடசாலை ஒன்றின் சிற்றுண்டிச்சாலை கொள்வனவு செய்கிறது.

B – பாடசாலை ஒன்றிற்கு நன்கொடையாக வழங்குவதற்காக ஒருவர் ஐந்து கணனிகளைக் கொள்வனவு செய்கிறார்.

C – தனது மகளுக்கு சட்டையொன்றினைத் தைப்பதற்காக தாயார் ஒருவர் தேவையானளவு துணியினைக் கொள்வனவு செய்கிறார்.

D – கட்டட ஒப்பந்ததாரர் ஒருவர் தேவையான கட்டடப் பொருட்களை கொழும்பிலிருந்து கொள்வனவு செய்து கொண்டுவருகிறார்.

E – தனது தாயாரின் ஓராண்டு நினைவு தின மதியபோசன நிகழ்வுக்காக வருகைதரவுள்ள *300* பேருக்குத் தேவையான பண்டங்களை ஒருவர் கொள்வனவு செய்கிறார்.

மேற்படி வணிக நடவடிக்கைகளிலிருந்து மொத்த வியாபார மற்றும் சில்லறை வியாபார நடவடிக்கைகளைச் சரியாகக் கொண்டுள்ள விடையினைத் தெரிவுசெய்க.

| | **மொத்த வியாபாரம்** | **சில்லறை வியாபாரம்** |
|---|---|---|
| *(1)* | A, D, E | B, C |
| *(2)* | A, B, E | C, D |
| *(3)* | D, E | A, B, C |
| *(4)* | A, E | B, C, D |
| *(5)* | A, B, C | D, E |

(……)

**24.** இலத்திரனியல் வியாபாரம் இடம்பெறும் முறைகள் X நிரலிலும் அவற்றுக்கான எடுத்துக்காட்டுக்கள் Y நிரலிலும் தரப்பட்டுள்ளன.

| நிரல் X | நிரல் Y |
|---|---|
| A – B2B | *1* – வணிகமொன்றினால் ஊழியர் சேம இலாப நிதி செலுத்தப்படல். |
| B – C2C | *2* – பாதணிகள் விற்பனையாளர் ஒருவர் அதன் உற்பத்தியாளருக்கு இணைய மூலமாக கட்டளை பிறப்பித்தல். |
| C – B2G | *3* – வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை (SLIPS) |
| D – G2B | *4* – Ebay வெப்தளத்தினூடான கொடுக்கல்வாங்கல்கள் |

மேற்படி X நிரலிலுள்ள இலத்திரனியல் வியாபாரம் இடம்பெறும் முறைகளையும் Y நிரலிலுள்ள அவற்றுக்கான எடுத்துக்காட்டுக்களையும் இணைக்கும்போது பெறப்படும் சரியான விடையினைத் தெரிவுசெய்க.

*(1)* A-3, B-1, C-2, D-4  *(2)* A-4, B-3, C-1, D-3  *(3)* A-4, B-2, C-1, D-3
*(4)* A-2, B-4, C-3, D-1  *(5)* A-2, B-4, C-1, D-3  (……)

**25.** முகாமைத்துவத்தின் பிரதான தொழிற்பாடுகள் X நிரலிலும் அவற்றோடு தொடர்புபடும் கூற்றுக்கள் Y நிரலிலும் தரப்பட்டுள்ளன.

| நிரல் X | நிரல் Y |
|---|---|
| A – திட்டமிடல் | *1* – அமைப்பொன்றின் நோக்கங்களை அடைந்துகொள்வதில் தனி நபர்களை ஊக்குவித்தல். |
| B – ஒழுங்கமைத்தல் | *2* – வளங்களைப் பகிர்ந்தளித்தல் |
| C – நெறிப்படுத்தல் | *3* – இடைவிலகல்களை அளத்தல் |
| D – கட்டுப்படுத்தல் | *4* – இலக்குகளையும் உபாய வழிமுறைகளையும் அறிந்துகொள்ளல். |

மேற்படி முகாமைத்துவ தொழிற்பாடுகளையும் தொடர்புபடும் கூற்றுக்களையும் சரியாக இணைக்கும் போது பெறப்படும் விடையினைத் தெரிவுசெய்க.

*(1)* A-4, B-2, C-3, D-1  *(2)* A-4, B-2, C-1, D-3  *(3)* A-4, B-2, C-1, D-3
*(4)* A-3, B-3, C-2, D-3  *(5)* A-2, B-1, C-3, D-4  (……)



kalvi.lk

**26.** ஒழுங்கமைத்தலில் மையப்படுத்தல் மற்றும் பன்முகப்படுத்தல் ஆகியவற்றின் அனுகூலங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A – மிக விரைவாகத் தீர்மானங்களை எடுக்க முடிதல்.

B – தீர்மானங்களில் ஒருமைப்பாடு காணப்படல்.

C – உயர்மட்ட முகாமையின் கருமங்கள் குறைவடைதல்.

D – தொடர்பாடல் இலகுவாக அமைதல்.

E – தீர்மானங்களை இலகுவாக நடைமுறைப்படுத்த முடிதல்.

F – கீழுள்ள ஊழியர்கள் ஊக்கப்படுத்தப்படல்.

G – குறைந்த கிரயம்

மையப்படுத்தலின் அனுகூலங்களை மாத்திரம் உள்ளடக்கிய விடைத்தொகுதியினைத் தெரிவுசெய்க.

*(1)* A, B, D, E　　*(2)* C, E, F　　*(3)* A, B, E

*(4)* A, B, D, G　　*(5)* C, F, G　　(……)

**27.** முகாமையாளர் ஒருவரின் பின்வரும் வகிபாக நடவடிக்கைகளில் தீர்மானமெடுத்தல் வகிபாகத்தினுள் உள்ளடக்கப்பட **முடியாத** நடவடிக்கையினைத் தெரிவுசெய்க.

*(1)* மாற்றடைகின்ற சூழல் நிலைமைகளுக்குப் பொருந்தக்கூடியவாறு அமைப்பினுள் மாற்றங்களைச் செய்தல்.

*(2)* நிறுவனம் மற்றும் பல்வேறு பிரிவினர்களிடையே தொடர்புகளைப் பேணுதல்.

*(3)* எதிர்பாராத நிலைமைகளுக்கு ஒப்பீட்டு ரீதியில் முகங்கொடுப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்தல்.

*(4)* அமைப்பின் பல்வேறு பிரிவினர்களிடையே வளங்களைப் பகிர்பவர்.

*(5)* உள்ளக மற்றும் வெளியகப் பிரச்சனைகளின்போது தலையீடு செய்யும் ஒருவராகக் கருமமாற்றுதல்.　　(……)

**28.** உற்பத்தி முறைகள் X நிரலிலும் பொருத்தமான உற்பத்திகள் Y நிரலிலும் தரப்பட்டுள்ளன.

| நிரல் X | நிரல் Y |
|---|---|
| A – வேலை உற்பத்தி | *1* – குளிர்பான உற்பத்தி |
| B – தொகுதி உற்பத்தி | *2* – நபர் ஒருவருக்கு வீடு ஒன்றினை அமைத்து வழங்குதல். |
| C – பாய்ச்சல் உற்பத்தி | *3* – வெதுப்பக உற்பத்தி |

X நிரலிலுள்ள உற்பத்தி முறைகளுடன் Y நிரலிலுள்ள உற்பத்திகளை ஒழுங்குபடுத்தி இணைக்கும்போது பெறப்படும் சரியான விடையினைத் தெரிவுசெய்க.

*(1)* A-2, B-3, C-1　　*(2)* A-3, B-2, C-1　　*(3)* A-1, B-3, C-2

*(4)* A-1, B-2, C-3　　*(5)* மேற்கூறிய எவையுமல்ல　　(……)

**29.** ஆடைத் தொழிற்சாலை ஒன்றின் உற்பத்திப் பொருளின் தரத்தினை முன்னேற்றுவது தொடர்பில் இடைநிலைமட்ட முகாமையாளர்களுக்கும் உயர்மட்ட முகாமையாளர்களுக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலில் முகாமையாளர்களால் முன்மொழியப்பட்ட சில சிபார்சுகள் வருமாறு.

சங்கரன் - குறித்த செயற்பாட்டுக் கருமத்தில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் சிறு குழுக்களாக ஒன்றிணைந்து கலந்துரையாடி அவர்களின் தொழில் மற்றும் வேலை தொடர்பான பிரச்சனைகளுக்கு தீர்வு காணுவதன் மூலம் பொருளின் தரத்தினை உயர்த்த முடியும்.

திலகன் - உற்பத்திப் பொருட்கள் எதுவித தவறுகளுமில்லாமல் உற்பத்தி செய்யப்படுவதை உறுதிப்படுத்துதல்.

சாருஜன் - உற்பத்திச் செய்முறையின் சகல படிமுறையிலும் முறையான சோதனை ஒன்றினை மேற்கொள்ளல்.

சிந்துஜன் - உற்பத்திச் செய்முறையின் செயலடைவு தொடர்பாகத் தரவுகளைச் சேகரித்து அவற்றை வரைபடம், அட்டவணை மற்றும் படங்கள் மூலம் உரிய பிரிவினர்களுக்கு தொடர்பாடல் செய்தல்.

மேற்குறித்த முகாமையாளர்களால் முன்மொழியப்பட்ட விடயங்களுக்கு வழங்கப்படக்கூடிய தரக் கட்டுப்பாட்டு நுட்ப முறைகளைச் சரியாகக் கொண்டுள்ள விடைத் தொகுதியினைத் தெரிவுசெய்க.



kalvi.lk

(1) சங்கரன் - தரப் பாதுகாப்பு, திலகன் - பூச்சிய வழு, சாருஜன் - தரவட்டம், சிந்துஜன் - புள்ளிவிபரரீதியான செயல்முறைக் கட்டுப்பாடு
(2) சங்கரன் - தரவட்டம், திலகன் - தரப் பாதுகாப்பு, சாருஜன் - பூச்சிய வழு, சிந்துஜன் - புள்ளிவிபரரீதியான செயல்முறைக் கட்டுப்பாடு
(3) சங்கரன் - தரவட்டம், திலகன் - பூச்சிய வழு, சாருஜன் - புள்ளிவிபரரீதியான செயல்முறைக் கட்டுப்பாடு, சிந்துஜன் - தரப் பாதுகாப்பு
(4) சங்கரன் - தரவட்டம், திலகன் - பூச்சிய வழு, சாருஜன் - தரப் பாதுகாப்பு, சிந்துஜன் - புள்ளிவிபரரீதியான செயல்முறைக் கட்டுப்பாடு
(5) சங்கரன் - பூச்சிய வழு, திலகன் - புள்ளிவிபரரீதியான செயல்முறைக் கட்டுப்பாடு, சாருஜன் - தரப் பாதுகாப்பு, சிந்துஜன் - தரவட்டம் (……)

**30.** பின்வரும் கூற்றுக்களை கருத்தில் கொள்க.

A – குறைந்த வளங்களைப் பயன்படுத்தி உச்ச வெளியீட்டினைப் பெற்றுக்கொள்ளல் வினைத்திறன் எனப்படும்.

B – குறித்த காலப்பகுதியியொன்றின் நிறுவனத்தின் உள்ளீட்டிற்கும் வெளியீட்டிற்கும் இடையில் காணப்படும் விகிதத் தொடர்பு உற்பத்தித்திறன் எனப்படும்.

மேற்படி கூற்றுக்கள் தொடர்பாக சரியான விடையினைத் தெரிவுசெய்க.

(1) A சரி, B தவறு
(2) A தவறு, B சரி
(3) A உம் B உம் தவறு
(4) A உம் B உம் சரி ஆனால் அவற்றுக்கிடையில் தொடர்பேதும் இல்லை.
(5) A உம் B உம் சரி ஆனால் அவை ஒன்றிலொன்று தங்கியுள்ளன. (…..…)

- **31 – 40 வரையான வினாக்களில் தரப்பட்டுள்ள இடைவெளியில் பொருத்தமான சொற்களை எழுதுக.**

**31.** (அ) …………………………. மற்றும் …………………………. என்பன உற்பத்திப் பொருளின் பிரதான வகைகள் ஆகும்.

(ஆ) வணிகங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் அகச் சூழல் காரணிகளின் நேரான தாக்கம் ………………………………… எனவும் அவற்றின் எதிரான தாக்கம் …………………………… எனவும் கூறப்படும்.

**32.** (அ) நவீன சமூகத்தின் ………………………….. மற்றும் ……………………… செயற்பாடுகளின் காரணமாக நாளாந்தம் அளவுக்கதிகமான கழிவுகள் சேர்வதானது பூகோளரீதியான பிரச்சனையொன்றாக மாறியுள்ளது.

(ஆ) கழிவுப் பொருள் முகாமைத்துவத்தில் சுத்தமான நீரினை பிளாஸ்ரிக் பொதிகளில் இடாதிருத்தலை …………………………….. ஆகவும், மீன்பிடித்தொழிலில் ஈடுபடும் வணிகமொன்று மீன்வளர்ப்பை மேற்கொள்ளல் …………………………. ஆகவும் குறிப்பிட முடியும்.

**33.** (அ) பொருளாதார நிலைப்புத்தன்மை என்பது அரசின் ஒரு பொருளாதார நோக்கமாகும். இதில் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தல், விலைமட்டத்தை நிலையாகப் பேணுதல், வட்டி வீதத்தைக் கட்டுப்படுத்தல் என்பன …………………………… விலை நிலைப்புத்தன்மை ஊடாகவும், வெளிநாட்டுச் செலாவணி வீதத்தை நிலையான மட்டத்தில் பேணல் …………………………… விலை மட்டங்களில் நிலைப்புத் தன்மையினூடாகவும் இடம்பெறும்.

(ஆ) பேரினப் பொருளாதார நிலைப்புத்தன்மையினைப் பாதுகாத்தல் ………………………………. கொள்கையின் நோக்கமாகும். அதேவேளை, நீண்ட காலத்தில் விலை மட்டத்தினை நிலையாகப் பேணிச் செல்வதோடு பணவீக்க மற்றும் சுருக்க நிலைமை …………………….. கொள்கை மூலம் கட்டுப்படுத்தப்படுகிறது.

**34.** (அ) இலாபம் உழைக்கும் நோக்கத்துடன் வணிகமொன்றை நடாத்திச்செல்லும் தனிநபர்களுக்கிடைய காணப்படும் தொடர்பு ………………………. எனப்படுவதோடு, பங்குடமை வணிகமொன்றில் எல்லாப் பங்காளரும் தனதும் ஏனைய பங்காளர்களினதும் முகவராகவும் முதல்வராகவும் தொழிற்படல் ……………………………….. எனப்படுகிறது.



kalvi.lk

(ஆ) அங்கீகார வணிகங்களை உற்பத்திப் பொருள் அங்கீகார வணிகம், ……………………………. அங்கீகார வணிகம் மற்றும் ………………………………. அங்கீகார வணிகம் என வகைப்படுத்த முடியும்.

**35.** முயற்சியாண்மையின் புதிய போக்குகளின் அடிப்படையில், பின்வரும் முயற்சியாண்மைச் சந்தர்ப்பங்களுக்கு பொருத்தமான முயற்சியாண்மையினைப் பெயரிடுக.

A – கொவிற் *19* இலிருந்து பாதுகாப்பு பெறுவதற்காக புதிய வகை முகக் கவசம் ஒன்றினை கிஷேன் உருவாக்கி வழங்குகிறார். …………………………………...

B – பாதணிகள் தொழிற்சாலையொன்றின் பிரதம நிறைவேற்று அதிகாரியான அனன் என்பவர் ஊழியர்களின் தரவுகளை இலகுவில் பெறக்கூடிய கணினி மென்பொருள் ஒன்றினை உருவாக்கியுள்ளார். …………………………………...

C – கேசவன் கையால் தயாரிக்கப்பட்ட அழகிய வாழ்த்து மடல்களை சமூக வலைத்தளப் பக்கங்கள் மூலமாக உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டில் உள்ளவர்களிடமிருந்தும் கிடைக்கப்பெறும் கட்டளைகளுக் கேற்ப வழங்கி வருகிறார். …………………………………...

D – பொலித்தீனுக்குப் பதிலாக இலகுவில் உக்கக்கூடிய விசேட வகையான கடைப்பைகளை (Shopping bags) ஹரிஸ் உருவாக்கி சந்தைக்கு வழங்குகிறார். …………………………………...

**36.** (அ) …………………………………. மற்றும் ………………………… என்பன இலத்திரனியல் வங்கிச் சேவை வசதிகளாகும்.

(ஆ) வங்கிக் கடன்களை பிரதானமாக ……………………………. ஆகவும் …………………………. ஆகவும் வகைப்படுத்தலாம்.

**37.** (அ) இலங்கையிலுள்ள வங்கிகளுக்கிடையில் பெறுமதி கூடிய கொடுப்பனவுகளைக் காலம் தாழ்த்தாது உயர் தொழிநுட்பத்தையும் தர நியங்களையும் பயன்படுத்தித் தீர்ப்பனவு செய்வதற்காக மத்திய வங்கியால் உருவாக்கப்பட்டுள்ள கணனிக் கொடுப்பனவு முறை ……………………………………………… என்பதோடு இம்முறையுடன் பத்திரங்களற்ற பிணையகத் தீர்ப்பனவு முறையினை (SSDS) இணைக்கும்போது ……………………………… முறைமை பெறப்படும்.

(ஆ) ஒரு நாடு தனது மிகையினை ஏனைய நாடுகளுக்கு விற்பனை செய்தல் ……………………… எனவும், பற்றாக்குறையான பொருட்களை ஏனைய நாடுகளிலிருந்து பெற்றுக்கொள்ளல் ……………………………… எனவும் அழைக்கப்படும்.

**38.** (அ) விற்பனையகங்களற்ற சில்லறை வியாபாரங்கள் ………………………………………………. மற்றும் ……………………………………………… ஆகிய இரு முறைகளில் இடம்பெறுகின்றன.

(ஆ) சுதந்திர வர்த்தகத்திற்குக் காணப்படும் தடைகள் ………………………………………. ஆகவும் ………………………………………. ஆகவும் வகைப்படுத்தப்படும்.

**39.** பதவிவழியின் அடிப்படையில் கிடைக்கும் வலுவினை அதிகாரம், …………………………….. மற்றும் ………………..……………… ஆகவும் வகைப்படுத்த முடியும் என்பதோடு தனிநபரின் அடிப்படையில் கிடைக்கும் வலுவினை செல்வாக்குச் செலுத்தக்கூடிய வலு, …………………………. மற்றும் ………………………………. ஆகவும் வகைப்படுத்த முடியும்.

**40.** (அ) பொருட்களுக்கான கட்டளை இடும் சந்தர்ப்பத்திலிருந்து அப்பொருட்கள் களஞ்சியசாலைக்கு கிடைப்பதற்கு எடுக்கும் காலம் ………………………………………. எனப்படுவதோடு குறிப்பிட்ட காலத்தில் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் ஆகக் கூடுதலான மூலப் பொருட்களின் அளவு ……………………………………. எனப்படும்.

(ஆ) பாய்ச்சல் உற்பத்தி முறைக்குப் பொருத்தமான உற்பத்தித் தொழிநுட்ப முறை ……………………………………... காணப்படுவதோடு உற்பத்தியினை வடிவமைப்பதற்கும் உற்பத்திச் செயன்முறை முகாமைத்துவத்திற்கும் கணினியினைப் பயன்படுத்தும் முறை ……………………………………. எனப்படும்.



kalvi.lk

- **41 – 50 வரையான வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.**

**41.** வணிகப் பரம்பலின் முக்கியமான விருத்திக் கட்டங்கள் நான்கினையும் தருக.

(1) ................................................................................................................................

(2) ................................................................................................................................

(3) ................................................................................................................................

(4) ................................................................................................................................

**42.** அரசினால் வணிகங்களுக்கு கிடைக்கும் உதவிகள், வழிகாட்டல்கள் என்பன முக்கியத்துவம் பெறும் முறைகள் நான்கு தருக.

(1) ................................................................................................................................

(2) ................................................................................................................................

(3) ................................................................................................................................

(4) ................................................................................................................................

**43.** அங்கீகார வணிகத்தில் அங்கீகாரம் பெறுபவருக்கு காணப்படக்கூடிய வரையறைகள் நான்கினை எழுதுக.

(1) ................................................................................................................................

(2) ................................................................................................................................

(3) ................................................................................................................................

(4) ................................................................................................................................

**44.** இலத்திரனியல் அட்டைகள் மூலம் கொடுப்பனவுகள் மேற்கொள்வதை இலகுபடுத்துவதற்காக வழங்கப்படும் சேவைகள் நான்கு தருக.

(1) ................................................................................................................................

(2) ................................................................................................................................

(3) ................................................................................................................................

(4) ................................................................................................................................

**45.** பொதுக் காப்புறுதியின் கீழ் பெறக்கூடிய காப்புறுதி ஒப்பந்த வகைகள் நான்கு தருக.

(1) ................................................................................................................................

(2) ................................................................................................................................

(3) ................................................................................................................................

(4) ................................................................................................................................

**46.** பொருத்தமான போக்குவரத்து ஊடகமொன்றினைத் தெரிவுசெய்யும்போது கவனத்தில்கொள்ளவேண்டிய காரணிகள் நான்கு தருக.

(1) ...................................................... (2) ......................................................

(3) ...................................................... (4) ......................................................

**47.** வெளிநாட்டு வியாபாரத்தின் வகைகள் நான்கினையும் தருக.

(1) ................................................................................................................................

(2) ................................................................................................................................

(3) ................................................................................................................................

(4) ................................................................................................................................

**48.** பொருத்தமான தலைமைத்துவ முறையை இனங்காணும்போது கவனம் செலுத்த வேண்டிய காரணிகள் நான்கு தருக.

(1) ...................................................... (2) ......................................................

(3) ...................................................... (4) ......................................................



kalvi.lk

**49.** இருப்புக் கட்டுப்பாட்டு முறைகளைத் தருக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

(3) ..............................................................................................................

(4) ..............................................................................................................

**50.** முழுமையான சந்தைப்படுத்தல் எண்ணக்கருவில் உள்ளடக்கப்படும் கூறுகளைத் தருக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

(3) ..............................................................................................................

(4) ..............................................................................................................

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

FWC

| தரம் :- 13 (2021) | வணிகக் கல்வி II | நேரம்: 3 மணித். 10 நிமி. |
|---|---|---|

**கவனிக்க:**

**பகுதி I மற்றும் பகுதி II இலிருந்து ஆகக் குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிவுசெய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

## பகுதி I

**01.** மிதுலன் என்பவர் இணைய வணிகம் தொடர்பான சிறந்த கணினி அறிவினைக் கொண்டவராவார். மேலும் பளபளப்பான துணிகளையும் அழகிய வர்ணக் கடதாசிகளையும் தடித்த அட்டைகளையும் பயன்படுத்தி கண்கவர் வாழ்த்து மடல்களை கைவினைப் பொருளாக தயாரிப்பதில் திறமை கொண்டவராவார். அவர் தனது உற்பத்திப் பொருட்களை சமூக வலைத்தளங்கள் ஊடாக விளம்பரப்படுத்தி உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வாடிக்கையாளர்களிடமிருந்து கட்டளைகளைப் பெற்று, இரண்டு ஊழியர்களின் உதவியுடன் விற்பனை செய்து வருகிறார். இவர் விற்பனையையும் இலாபத்தையும் அதிகரிப்பதற்காகவும் வணிகம் நிலைத்திருப்பதற்காகவும் ஏற்றுக்கொள்ளத்தக்க விலையினையே நிர்ணயித்ததோடு வாழ்த்து மடல்களின் புதிய வகையான வடிவமைப்புக்களிலும் அதிகம் கவனம் செலுத்துகிறார்.

(i) (அ) மேலுள்ள விடய ஆய்வில் உள்ளடங்கியுள்ள இரண்டு பிரதான அடிப்படை வணிகச் செயற்பாடுகளை விளக்குக.

(ஆ) மேலே குறிப்பிடப்பட்டுள்ள வணிகத்தின் பிரதான நோக்கங்கள் இரண்டினைத் தருக. *(04 புள்ளிகள்)*

(ii) எக்காரணிகளின் அடிப்படையில் வாழ்த்து மடல்களின் விற்பனை உயர்வாகக் காணப்பட முடியும் எனக் குறிப்பிடுக. *(04 புள்ளிகள்)*

(iii) (அ) மிதுலனால் மேற்கொள்ளப்படும் இலத்திரனியல் வணிகத்தின் வடிவத்தினைப் பெயரிடுக.

(ஆ) அவ்வகை இலத்திரனில் வணிகத்தினால் மிதுலனுக்கு கிடைக்கக்கூடிய அனுகூலங்களைத் தருக. *(04 புள்ளிகள்)*

(iv) (அ) SWOT பகுப்பாய்வினை மேற்கொள்வதன் மூலம் மிதுலன் தனது வணிகத்தை வெற்றிகரமான முறையில் நடாத்தலாம் என எண்ணுகிறார். SWOT பகுப்பாய்வின் மூலம் மிதுலனுக்கு எவ்வாறான நன்மைகள் கிடைக்கும் எனக் கூறுக.

(ஆ) மிதுலனிடம் காணப்படும் பலங்கள் நான்கு தருக. *(04 புள்ளிகள்)*

(v) மிதுலன் தனது உற்பத்தி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தக்கூடிய உற்பத்திக் காரணிகளைக் குறிப்பிட்டு உதாரணங்கள் தருக. *(04 புள்ளிகள்)*

***(மொத்தம் 20 புள்ளிகள்)***

**02.** (i) (அ) வணிகங்கள் சமூக ரீதியான பொறுப்புக்களை நிறைவேற்றுவதன் தேவைப்பாடு தொடர்பாகக் கூடிய அவதானமொன்று நிகழ்காலத்தில் விருத்தியடைந்துள்ளது. ஏனென குறிப்பிடுக.

(ஆ) சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுதவன் மூலம் வணிகங்களுக்கு எதுவித அனுகூலங்களும் ஏற்படுவதில்லை என உமது நண்பர் கூறுகிறார். அவற்றை நிறைவேற்றுவதன் அனுகூலங்களை அவருக்கு எவ்வாறு விளக்குவீர்? *(04 புள்ளிகள்)*

(ii) (அ) மத்திய வங்கியின் பின்வரும் நடவடிக்கைகள் நாட்டின் பண வழங்கல் மீது ஏற்படுத்தும் தாக்கத்தினை "அதிகரிக்கும்" அல்லது "குறையும்" என எழுதிக் காட்டுக.

1. மத்திய வங்கி வட்டி வீதத்தைக் குறைத்தல்.
2. மத்திய வங்கி அரச பிணைப்பத்திரங்களை விற்பனை செய்தல். *(01 புள்ளி)*



kalvi.lk

(ஆ) பின்வரும் வரிகளை நேர் வரி மற்றும் நேரில் வரி என வகைப்படுத்திக் காட்டுக.

வருமான வரி | நிறுத்தி வைத்தல் வரி
சேர்க்கப்பட்ட பெறுமதி மீதான வரி | சுங்க வரி (02 புள்ளிகள்)

(இ) நுகர்வோர் பாதுகாப்பின் மூலம் வணிகங்களுக்கு கிடைக்கும் அனுகூலங்கள் இரண்டு தருக. (01 புள்ளி)

(iii)(அ) தனி வியாபாரியான யதுகுலன் தனது நண்பரான சலீமை இணைத்து தனது வணிகத்தை பங்குடமை வணிகமாக மாற்ற எண்ணினார். இவ்வாறு அவர் தனது வணிகத்தை மாற்றுவதன் மூலம் அவருக்கு ஏற்படக்கூடிய அனுகூலங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளின் பண்புகளைத் தருக. (02 புள்ளிகள்)

(iv)(அ) பிணையால் வரையறுக்கப்பட்ட கம்பனியொன்று எவ்வாறு ஏனைய கம்பனி வகைகளிலிருந்து வேறுபடுகிறது என விளக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) கூட்டுறவு வணிகங்கள் ஏனைய தனியார்துறை வணிகங்களுடன் ஒப்பிடும்போது வாடிக்கையாளர் மத்தியில் அவற்றின் முக்கியத்துவம் குறைந்த நிலையிலேயே உள்ளன. கூட்டுறவு வணிகங்களை முன்னேற்றுவது தொடர்பில் உமது ஆலோசனைகளை முன்வைக்குக.

(v) (அ) அங்கீகார வணிகத்துடன் தொடர்புபட்ட தரப்பினர்களைக் குறிப்பிட்டு விளக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) பின்வரும் வியாபார இணைப்புக்களைப் பெயரிடுக.

1. மென்பொருள் அபிவிருத்தி நிறுவனமான மைக்ரோசொவ்ட் நிறுவனமானது நொக்கியா கம்பனியின் மென்பொருள் அலகினைக் கொள்வனவு செய்தல்.
2. பால்மா உற்பத்திக் கம்பனியொன்று எழுதுபொருள் உற்பத்திக் கம்பனியுடன் இணைதல். (01 புள்ளிகள்)

(இ) மத்திய அரசின் கீழ் தொழிற்படும் இரண்டு வகையான அரச நிறுவன அமைப்பு வகைகளைத் தருக. (01 புள்ளிகள்)

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

***03.*** (i) (அ) பின்வரும் கூற்றுக்களில் கூறப்பட்ட நபர்களிடம் காணப்படும் விசேட முயற்சியாண்மைப் பண்புகளைக் கண்டறிந்து எழுதுக.

1. விதுரன் தனது தந்தையால் நடாத்திச் செல்லப்பட்ட மரக்கறி விற்பனையகத்தினை சிறப்பு விற்பனையகமாக மாற்றி நடாத்திச் செல்கிறார்.
2. சஞ்சயன் கொரோனா நோயினைக் கட்டுப்படுத்துவதற்காக மூலிகைகளாலான மருத்துவ சேர்க்கை ஒன்றினை உருவாக்கி சந்தைக்கு முன்வைத்துள்ளார்.
3. யுதிஷ்ரன் நட்டத்துடன் நடாத்திச் செல்லப்பட்ட பயணிகள் பேருந்து ஒன்றினைக் குத்தகைக்கு எடுத்து புதிய பகுதிகளை அதனுடன் இணைத்து சேவையில் ஈடுபடுத்தி வருகின்றார்.
4. புதிய சவர்க்கார உற்பத்தியில் ஈடுபட்டுள்ள மாதவன் தனது உற்பத்திப் பொருளின் தரத்தினை உயர்த்துவதற்காக அயராது உழைத்து சந்தையில் குறிப்பிடத்தக்க வாடிக்கையாளர்களைக் கொண்டுள்ளார். (02 புள்ளிகள்)

(ஆ) முயற்சியாண்மைகளை நடாத்துவதன் மூலம் முயற்சியாளர்களுக்கு கிடைக்கக்கூடிய அனுகூலங்கள் யாவை? (02 புள்ளிகள்)

(ii) (அ) போதியளவு நிதி வசதியினைக் கொண்டுள்ள உமது நண்பர் ஒருவர் வணிகமொன்றினை சிறியளவில் ஆரம்பிக்க எண்ணியுள்ளார். எனினும் அரசால் வழங்கப்படும் ஏனைய ஊக்குவிப்புக்களை அவர் அறிந்திருக்கவில்லை. அரசின் அவ்வாறான ஊக்குவிப்புக்களை அவருக்கு எடுத்துக்கூறுக. (02 புள்ளிகள்)

(ஆ) சிறிய நடுத்தரளவு வணிகங்கள் தோல்வியடைவதற்கு ஏதுவான காரணங்கள் யாவை? (02 புள்ளிகள்)

(iii)(அ) இலங்கை மத்திய வங்கியின் முதன்மைத் தொழிற்பாடுகள் நான்கு தருக. (02 புள்ளிகள்)

(ஆ) இலங்கையிலுள்ள வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையினை மேற்கொள்வதற்காக உருவாக்கப்பட்ட நிறுவனம் யாது? இந்நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் தீர்வக நடவடிக்கைகளைத் தருக. (02 புள்ளிகள்)


kalvi.lk

(iv) (அ) வணிக வங்கிகளால் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் பிரதிகர்த்தா சேவைகளைத் தருக. (02 புள்ளிகள்)

(ஆ) தன்னியக்க வங்கிச் சேவைகள் மூலம் வாடிக்கையாளர்களுக்குக் கிடைக்கும் நன்மைகள் நான்கினைத் தருக. (02 புள்ளிகள்)

(v) (அ) புதிதாக வணிகமொன்றினை ஆரம்பித்துள்ள ஒருவர் வணிகக் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்காக புதிதாக நடைமுறைக் கணக்கொன்றையும் ஆரம்பித்துள்ளார். காசோலைகளை வரைவதில் போதியளவு பரீட்சயமில்லாத அவருக்கு நீர் எவ்வாறு அவ்விடயம் தொடர்பாக அறிவுரை வழங்குவீர்? (02 புள்ளிகள்)

(ஆ) கடனட்டை, வரவட்டை தவிர்ந்த ஏனைய இலத்திரனியல் பண வகைகளில் இரண்டினைத் தருக. இலத்திரனியல் பணக் கொடுக்கல் வாங்கலின் அனுகூலங்கள் இரண்டினைத் தருக. (02 புள்ளிகள்)

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

**04.** (i) (அ) காப்புறுதியில் 'மறுகாப்புறுதி (Reinsurance)' என்பதையும் 'ஒப்புறுதி (Underwriting)' என்பதையும் தனித்தனியாக விளக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) பண்டார என்பவர் சுமதி என்பவரை திருமணம் செய்த பின்னர் தனது மனைவியாகிய சுமதியின் ஆயுளைக் காப்புறுதி செய்திருந்தார். சிறிது காலத்தின் பின்னர் அவர் சுமதியை விவாகரத்துச் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. எனினும் பண்டார சுமதியின் ஆயுளுறுதிக்கான தவணைப் பணத்தினை தொடர்ந்து செலுத்தி வந்தார். நாளடைவில், நோய்வாய்ப்பட்ட சுமதி இறக்க நேரிட்டது. பண்டார தனது முன்னாள் மனைவியின் இறப்புக்கான இழப்பீடு கோரி காப்புறுதிக் கம்பனிக்கு விண்ணப்பித்திருந்தார்.
காப்புறுதிக் கம்பனி அவருக்கு இழப்பீட்டினை வழங்குமா அல்லது இழப்பீட்டுக் கோரிக்கையினை நிராகரிக்குமா எனக் குறிப்பிடுக. எக்காப்புறுதித் தத்துவத்தின் கீழ் அது நடைபெறும்? (02 புள்ளிகள்)

(ii) (அ) வணிக நடவடிக்கைகளுக்கு மாத்திரமன்றி சமூக நடவடிக்கைகளிலும் தொடர்பாடல் முக்கியத்துவம் பெறுகிறது. விளக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) வணிக நடவடிக்கைகளில் தொடர்பாடல் இன்றியமையாததாகக் காணப்பட்டாலும் அதிலுள்ள தடைகள் காரணமாக சில வணிகங்கள் பாதிப்புக்கு உள்ளாகின்றன. தொடர்பாடலிலுள்ள தடைகளை அகற்றுவது தொடர்பாக வணிகங்களுக்கு எவ்வாறான உபாய முறைகளை முன்வைப்பீர்? (02 புள்ளிகள்)

(iii) (அ) போக்குவரத்து துறையின் வளர்ச்சிப் போக்கினை எடுத்துக்காட்டுக்கள் தந்து விளக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) போக்குவரத்து வழங்கல் சேவையின் (அமையவியலின்) இரண்டு அடிப்படைச் செயன்முறைகளையும் குறிப்பிட்டு விளக்குக. (02 புள்ளிகள்)

(iv) (அ) பின்வரும் நிறுவனங்களுக்குப் பொருத்தமான அமையவியல் முறையினை பிரேரிக்க.

1. பழப்பாகு உற்பத்தி நிறுவனம்
2. சில்லறை வியாபார நிலையம்
3. நறுமணப் பொருள் உற்பத்தி நிறுவனம்
4. வாயு முகவர் நிறுவனம் (02 புள்ளிகள்)

(ஆ) 'மொத்த வியாபாரி' மற்றும் 'முகவர்' ஆகியோரைத் தனித்தனியாக வரையறுக்க. (02 புள்ளிகள்)

(v) (அ) சில்லறை வியாபாரத்தில் காணப்படக்கூடிய புதிய போக்குகள் நான்கு தருக. (02 புள்ளிகள்)

(ஆ) வெளிநாட்டு வியாபாரத்தில் பயன்படுத்தப்படும் கொடுப்பனவு முறைகள் நான்கினைத் தருக. (02 புள்ளிகள்)

**(மொத்தம் 20 புள்ளிகள்)**


kalvi.lk

## பகுதி II

**05.** (i) (அ) 'இயங்கு வணிகச் சூழல்' மற்றும் 'வணிக வளங்கள்' என்பவற்றை வரையறுக்க. (02 புள்ளிகள்)

(ஆ) வணிக அமைப்புக்களுக்கு மாத்திரமன்றி தனிநபர்களுக்கும் முகாமைத்துவம் தேவைப்படுகிறது. விளக்குக. (02 புள்ளிகள்)

(ii) (அ) பின்வரும் அமைப்புக்களில் காணப்படும் பிரதானிகளுக்கு வழங்கப்படும் பதவிப் பெயர்களைத் தருக.

1. அஞ்சல் அலுவலகம்
2. வங்கிக் கிளை
3. பிரதேச செயலகம்
4. புகையிரத நிலையம் (02 புள்ளிகள்)

(ஆ) முகாமையாளர் ஒருவர் கொண்டிருக்க வேண்டிய வகிபாகங்களில் தகவல் வகிபாகத்தினுள் உள்ளடக்கப்படக்கூடிய பின்வரும் உப வகிபாகங்களை உதாரணத்துடன் விளக்குக.

1. தகவல்களை வழங்குபவர் (Disseminator)
2. ஊடகப் பேச்சாளர் (Spokesperson) (02 புள்ளிகள்)

(iii) (அ) உயர்மட்ட முகாமையாளர்களின் கருமங்கள் நான்கினைத் தருக. (02 புள்ளிகள்)

(ஆ) இலட்சியக் கூற்றொன்றைத் தயாரிக்கும்போது உள்ளடக்கப்பட வேண்டிய காரணிகளைத் தருக. (02 புள்ளிகள்)

(iv) க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த உமது நண்பரொருவருக்கு பல்கலைக்கழக கல்வி ஒன்றினைப் பெறுவதற்கான அனுமதி கிடைத்திருக்கும் அதேவேளை தனியார் வங்கி ஒன்றில் முகாமைத்துவ உதவியாளராகப் பணிபுரிவதற்கான சந்தர்ப்பமும் கிடைத்துள்ளது. இவ்விரண்டு மாற்றுத் தெரிவுகளில் பொருத்தமானதைத் தெரிவுசெய்வதற்கு நீர் உமது நண்பரை எவ்வாறு வழிப்படுத்துவீர்? (04 புள்ளிகள்)

(v) (அ) திட்டமிடலின்போது ஏற்படக்கூடிய சில பிரச்சனைகள் மற்றும் வரையறைகள் காரணமாக சில திட்டமிடல்கள் வெற்றியளிப்பதில்லை. ஏனென விளக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) தூர நோக்கு (Vision) மற்றும் இலட்சிய நோக்கக் கூற்று (Mission statement) என்பவற்றை வேறுபடுத்திக் காட்டுக. (02 புள்ளிகள்)

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

**06.** (i) (அ) வணிக நோக்கமொன்றில் காணப்பட வேண்டிய பண்புகள் யாவை? (02 புள்ளிகள்)

(ஆ) ஒழுங்கமைத்தலில் 'கட்டளையிடல் சங்கலி (Chain of command)' மற்றும் 'கட்டளையிடலில் ஒருமைப்பாடு (Unity of command)' என்பவற்றை தனித்தனியாக வரையறுக்க. (02 புள்ளிகள்)

(ii) (அ) அதிகார மையப்படுத்தலின் அனுகூலங்கள் இரண்டையும் பன்முகப்படுத்தலின் அனுகூலங்கள் இரண்டையும் தருக. (02 புள்ளிகள்)

(ஆ) நிறுவனமொன்றிற்கு தலைமைத்துவம் ஏன் தேவைப்படுகிறது? (02 புள்ளிகள்)

(iii) (அ) சர்வாதிகாரத் தலைவரின் பண்புகள் நான்கு தருக. (02 புள்ளிகள்)

(ஆ) முகாமைத்துவத்தில் தொடர்பாடலின் முக்கியத்துவத்தினை விளக்குக. (02 புள்ளிகள்)

(iv) (அ) செயற்பாட்டு முகாமைத்துவத்தின் அடிப்படைக் கருமத்தினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) உற்பத்தித் திட்டமிடல் மற்றும் உற்பத்தித் திட்டம் என்பவற்றை தனித்தனியாக வரையறுக்க. (02 புள்ளிகள்)

(v) வெவ்வேறு உற்பத்தி அமைப்புக்கள் தமது உற்பத்திச் செயற்பாட்டின் தன்மைக்கேற்ப பொருத்தமான தொழிற்சாலைத் தள அமைப்புத் திட்டத்தினைத் தெரிவுசெய்து அதற்கேற்ப தொழிற்சாலைகளை அமைக்கின்றன. பொருத்தமான தொழிற்சாலைத் தள அமைப்புத் திட்டத்தின் முக்கியத்துவத்தினை விளக்குக. (04 புள்ளிகள்)


kalvi.lk

**07.** (i) (அ) பின்வரும் உற்பத்தி நிறுவனங்களுக்குப் பொருத்தமான தொழிற்சாலைத் தள அமைப்புத் திட்டத்தினைப் பெயரிடுக.

1. தளபாட உற்பத்தி நிறுவனம் 2. மோட்டார் வாகன உற்பத்தி நிறுவனம்
3. ஆடைத் தொழிற்சாலை 4. தொடர்மாடிக் கட்டடம் (02 புள்ளிகள்)

(ஆ) இருப்புக் கட்டுப்பாட்டின் முக்கியத்துவத்தினைத் தருக. (02 புள்ளிகள்)

(ii) உற்பத்தி நிறுவனமொன்றின் இலாப நட்டமற்ற புள்ளியில் உற்பத்தி அலகுகள் 10 000 அலகுகளாகும். அலகு ஒன்றுக்கான மாறும் செலவு ரூபா 100 ஆகும்.

(அ) அலகுக்கான விற்பனை விலை ரூபா 300 எனின், மொத்த நிலையான கிரயத்தினைக் கணிக்க. (02 புள்ளிகள்)

(ஆ) அதே விற்பனை விலையில் 15 000 விற்பனை அலகுகளுக்கான இலாபத்தைக் கணிக்க. (02 புள்ளிகள்)

(iii) (அ) பின்வரும் இருப்புக் கட்டுப்பாட்டு முறைகளை விளக்குக. (02 புள்ளிகள்)

1. தொடர் இருப்பு அறிக்கைப்படுத்தும் முறை 2. கணினி நிகழ்ச்சித் திட்டம் (02 புள்ளிகள்)

(ஆ) மறுகட்டளை மட்டம் எனப்படுவது யாது? எவ்வாறு அது கணிப்பிடப்படும்?(02 புள்ளிகள்)

(iv) (அ) முறையாக இருப்பினைப் பேணாத வணிகமொன்றினால் எதிர்நோக்க வேண்டியேற்படக் கூடிய பிரச்சனைகள் யாவை? (02 புள்ளிகள்)

(ஆ) வணிக நிறுவனமொன்றிற்கு இருப்புத் தொடர்பாக ஏற்படக்கூடிய கிரயங்களில் கட்டளைக் கிரயங்கள் இரண்டையும் இருப்பு பேணல் கிரயங்கள் இரண்டையும் தருக. (02 புள்ளிகள்)

(v) (அ) பொருளொன்றின் 'தரம்' எனப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ஆ) உற்பத்தி வணிகமொன்றுக்கு ஏன் தரக் கட்டுப்பாடு முக்கியத்துவமுடையதாகும்? (02 புள்ளிகள்)

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

**08.** (i) (அ) கொள்வனவாளரின் தேவைகள், விருப்பங்களுக்கேற்ப சந்தையின் வகைகளைக் குறிப்பிட்டு விளக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) நவீன பரிமாற்றுப் பொருளாதாரமொன்றில் பாய்ச்சலை உள்ளடக்கிய சந்தை மாதிரியில் பின்வரும் சந்தைகளுக்கிடையில் இடம்பெறும் பாய்ச்சல் விடயத்தைக் குறிப்பிடுக.

1. அரச சந்தையிலிந்து நுகர்வோர் சந்தைக்கு
2. உற்பத்திச் சந்தையிலிருந்து அரச சந்தைக்கு
3. நுகர்வோர் சந்தையிலிருந்து அரச சந்தைக்கு
4. நுகர்வோர் சந்தையிலிருந்து வளச் சந்தைக்கு (02 புள்ளிகள்)

(ii) பின்வரும் எண்ணக்கருக்களை வரையறுக்க.

(அ) வழங்கலும் உற்பத்திப் பொருள் சின்னமும் (Offering and brands)

(ஆ) சந்தைத் துண்டமாக்கலும் இலக்கு சந்தையும் (Market segmentation and target market) (04 புள்ளிகள்)

(iii) (அ) சந்தையொன்றில் வணிகங்களுக்கிடையில் காணப்படக்கூடிய போட்டி நிலைமைகளை வகைப்படுத்திக் காட்டுக. (02 புள்ளிகள்)

(ஆ) வணிகரொருவருக்கு சந்தைப்படுத்தல் எவ்வாறு முக்கியத்துமானது என்பதை விளக்குக. (02 புள்ளிகள்)

(iv) (அ) விற்பனையாளரை மையப்படுத்திய சந்தைப்படுத்தல் எண்ணக்கருக்கள் இரண்டும் நுகர்வோரை மையப்படுத்திய சந்தைப்படுத்தல் எண்ணக்கருக்கள் இரண்டும் தருக. (2 புள்ளிகள்)

(ஆ) சந்தைப்படுத்தல் என்பது பொருட்கள் சேவைகளின் கொள்வனவு விற்பனைகளை மாத்திரம் கருதுவதில்லை. விளக்குக. (2 புள்ளிகள்)

(v) முழுமையான சந்தைப்படுத்தல் எண்ணக்கருவின் உள்ளடக்க எண்ணக்கருக்களைக் குறிப்பிட்டு விளக்குக. (4 புள்ளிகள்)


kalvi.lk

Education கல்வி அධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page